www.tamilarangam.net

# ஆக்கிரமிப்பு இந்திய அரசின் பாசிசப் படுகொலைகளை முறியடிப்போம்!

---

- ★ ஈழமுரசு, முரசொலி ஆகிய பத்திரிகை அலுவலகங்கள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன.
- ★ யாழ் மருத்துவமனையின் மீது நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் ஏராளமானோர் கொல்லப் பட்டனர். கட்டிடங்கள் சேதமடைந்தன.
- ★ நூற்றுக்கணக்கான நிராயுதபாணிகளான அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

---

இன்றைய பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளாக உள்ள இவை ஈழமண்ணில் இந்திய கொலைவெறி ராணுவம் கட்டவிழ்த்து விட்டுள்ள படுகொலைகளை உங்களுக்கு தெரிவிக்கின்றன. ஈழத்தில் அமைதியும் சுமுகமான நிலையும் திரும்பி விட்டதாக ஆர்ப்பரித்த பத்திரிகைகள், இன்று இலங்கை அரசின் தாக்குதலின் போது வாழ்ந்ததை விட மோசமான-சகிக்க வியலாத வாழ்நிலையில் ஈழமக்கள் இருப்பதாக தெரிவிப்பதேன்?

## அப்பட்டமான ஆதிக்க வெறி

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக குவிக்கப்பட்ட இந்திய ராணுவம் ஆனது ஈழமண் எங்கும் தனது கொலைவெறிச் செயல்களை தொடருகின்றது. தனக்கு தானே இட்டுக் கொண்ட "சமாதானப் படை" என்ற முகமூடியை தனது கையாலேயே கிழித்து எறிந்து விட்டு எமது மக்களை கொன்றொழித்து எமது தேசத்தை ரத்தக் காடாக்கி வருகின்றது!

தனது மேலாதிக்க நோக்கங்களுக்காகவும் சந்தைச் சுரண்டலுக்காகவும் எம்மீது, எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத, ஓர் ஒப்பந்தத்தை இந்திய அரசு திணித்தது. அதன் ஓர் அங்கமான "இடைக்கால நிர்வாக சபை" அங்கத்துவத்தில் தனது அடிவருடி இயக்கங்களுக்கு இந்திய அரசு சந்தர்ப்பம் அளிக்க முயன்றும், புலிகளின் பலத்த எதிர்ப்பினால் தோல்வியைத் தழுவியது. முழுக்க முழுக்க- பூரணமான இந்திய சார்பு நிலைப்பாட்டை கடைப்பிடிப்பவர்களை கவுன்சிலில் இடம்பெறச் செய்வதினூடாக ஈழத்தின் சிவில் நிர்வாகத்தில் தனது ஆதிக்கத்தை நிறுவும் அதன் கனவு அடிபட்டுப் போனது. இடைக்கால நிர்வாகக் கவுன்சிலுக்கு தெரிவு செய்யப்பட்ட எவரும் "பூரண இந்திய சார்பு நிலைப்பாடு" மட்டும் உடையவர்களல்ல. தனது ஆதிக்க வெறிக்கு தடையான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளை பழிவாங்க சந்தர்ப்பத்தை உருவாக்கத் துடியாத் துடித்தது. ஏற்கனவே தனது ''கூலி'' இயக்கங்கள் மூலம் புலிகளை அழிக்க முயன்று மூக்குடைப்பட்டது. புலிகளை கடித்துக் குதறுவதற்கு காத்திருந்த இந்திய இராணுவம் புலிகளை ஆத்திரமூட்டி, சிங்கள மக்கள் மீதும் காவல் நிலையங்கள் மீதும் தாக்கச் செய்து, தங்கள் சதித்திட்டத்தை நிறைவேற்றி உள்ளது.

## அமைதிப் படையா? ஆக்கிரமிப்புப் படையா?

ஆயுதபாணியாக உள்ள புலிகளை நிராயுதபாணியாக்கி பலவீனப் படுத்துவது என்ற பெயரில் தனது காட்டுமிராண்டித்தனத்தை கட்டவிழ்த்து விட்டுள்ள இந்திய அரசு, 2,500 புலிகளை அடக்க 30,000-க்கும் மேற்பட்ட துருப்புக்களை இலங்கையில் குவித்துள்ளது.

சிறுரக ஆயுதங்களுடனும் கண்ணிவெடிகளுடனும் உள்ளூர் கைக்குண்டுகளுடனும் போராடும் புலிகளை ஒழிப்பதற்கு பிரதேசங்களையே அழிக்கும் பீரங்கிகளும் டாங்கிகளும் குண்டு வீச்சு விமானங்களும் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. இவற்றின் வெறியாட்டத்தினால் ஆயிரக்கணக்கான மக்கள் பலி எடுக்கப் பட்டுள்ள்னர். யாழ்-மருத்துவமனை மோசமாகத் தாக்கப்பட்டுள்ளது. குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் முதல் வயோதிபர் வரை தமது உயிர்களை பறிகொடுத்துள்ளனர். மருத்துவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அமைதி காக்கப் புறப்பட்டவர்கள் மிருகங்களைவிடக் கேவலமாக, மனித உணர்வுகளை இழந்து, கற்பழிப்புகளில் குதித்துள்ளனர். சிறிலங்கா **இனவெறிப்படைகள் மேலானவர்கள்** என்று எமது மக்கள் கருதும் அளவுக்கு குறுகிய காலத்தில் இலங்கை ராணுவம் செய்யாதளவு படுகொலைகளையும் கற்பழிப்புகளையும் அழிவுகளையும் இந்திய ராணுவம் புரிந்துள்ளது.

எமது மக்களை ஒடுக்குவதிலும் எமது சுயநிர்ணய உரிமையை மறுப்பதிலும் சிறிலங்கா அரசைவிட இந்திய அரசு எவ்விதத்திலும் குறைவானதல்ல என்பதை எமது மக்கள் நன்றாகவே புரிந்துள்ளார்கள். இந்திய ராணுவம் இலங்கையில் குவிக்கப்பட்டது. தனது ஆளும் வர்க்கங்களுக்கு சேவை செய்யவேயொழிய, எமது நலன்களுக்காக அல்ல என்பதையும் நமது மக்கள் புரிந்து உள்ளார்கள்.

## அன்பார்ந்த இந்திய-தமிழக மக்களே!

83 ஆடிக் கலவரத்திலிருந்து இந்திய அரசு ஈழப் பிரச்சனையில் காட்டிய ஆர்வத்தின் உள் நோக்கமானது குறைந்தபட்ச மனிதாபிமான உணர்வு கூட அற்ற மேலாதிக்க வெறியே என்பது அம்பலமாகி உள்ளது.

போராளிகளை பயிற்றுவித்து ஆயுதபாணியாக்கியதும் இந்தியாவில் பகிரங்கமாக நடமாட அனுமதி அளித்ததும் சர்வதேச அரங்கில் இலங்கை அரசிற்கு ராஜதந்திர ரீதியான நெருக்கடிக்களை கொடுத்ததும் உணவுப் பொட்டலங்களை விமானத்திலிருந்து போட்டதும் இலங்கை அரசை தனக்கு அடிபணிய வைத்து முழுத்தீவையும் தனது மேலாதிக்கத்திற்கு கொண்டு வருவதற்கான இந்திய அரசின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உத்திகளே ஒழிய வேறொன்றும் கிடையாது. இத்தகைய போலி நாடகங்களினூடாக ஈழ, இந்திய மக்களை ஏமாற்றி, பச்சைத் துரோகத் தனம் புரிந்துள்ளது.

தனது ஆளும் வர்க்கங்களுக்கு புதிய சந்தையை உருவாக்குவதற்கு நாளொன்றுக்கு 3 கோடி ரூபாயை இந்திய இராணுவம் ஏப்பம் விடுகின்றது. நியாயமற்ற, அநீதியான தனது ஆக்கிரமிப்பின் கோர முகங்கள் வெளி உலகிற்கு தெரியக்கூடாது என்பதற்காக வெளிநாட்டு பத்திரிகை நிருபர்களையும் குடா நாட்டுக்குள் வரவிடாமல் தடுத்துள்ளது.

பாசிச இட்லர் கூட விட்டு வைத்திருந்த பல்கலைக் கழகங்கள், வைத்தியசாலைகள் ஆக்கிரமிப்பு ராணுவத்தின் குகைகளாக மாறி உள்ளன. இத்தகைய மக்கள் விரோத பாசிச ராஜீவ் கும்பலின் ஈனத்தனமான செயல்களை எதிர்த்து உங்கள் தார்மீக ஆதரவை எங்களுக்கு வழங்குங்கள்.

குடா நாடு முழுவதும் தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து வெளி உலகத் தொடர்புகளை துண்டிப்பதினூடாக எமது குரல்கள் நசுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் குரலற்ற எமது மக்களின் குரலாக முழங்குங்கள்.

எம்மீது திணிக்கப்பட்டுள்ள புதிய விலங்கான இந்திய மேலாதிக்கத்தை உடைத்தெறிவதில் உங்கள் பங்களிப்பும் பலமாக இருக்கட்டும்.

## எங்கள் தலைவிதியை நாமே தீர்மானிப்போம்

எங்கள் மண்ணில், எங்கள் பலத்தில் தங்கி நின்று இந்திய மேலாதிக்க எதிர்ப்பு யுத்தத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லவே நாம் விரும்புகின்றோம். ஒடுக்குமுறை அற்ற சமூக அமைப்பில் வாழ விரும்பும் நாம், எம்மீதான எந்தவொரு ஆதிக்கத்திற்கும் அடிபணிவதற்கு தயாரானவர்களல்ல. அத்தகைய அச்சுறுத்தலுக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிராக, தாய் நாட்டைக் காப்பதற்காக, இறுதிவரை போராடுவோம், எங்கள் தேசம் எங்களுக்கு வேண்டும். எங்கள் தேசத்தின் தலைவிதியை தீர்மானிக்க எங்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. அதற்காகப் போரிடுவதும் ஆயுதம் தரிப்பதும் எமது ஜனநாயக உரிமை ஆகும். நமது ஆயுதங்களை கீழே போடச் சொல்வது, எமது ஜனநாயக உரிமைகளை பறித்து எம்மை அடிமையாக வாழ வைக்கும் சதித்திட்டமேயாகும்.

### இந்திய இராணுவமே!

- ★ இலங்கையை விட்டு வெளியேறு!
- ★ அமைதிப்படை என்ற பெயரில் ஆக்கிரமிக்காதே!!

### இந்திய மக்களே!

- ★ இந்திய ராணுவத்தை வாபஸ் பெறக் கோருங்கள்!
- ★ எமது போராட்டத்திற்கு இறுதி வரை ஆதரவு நல்குங்கள்!!

வெளியீடு எண்: 02
தமிழீழம்,
10-11-87.

தோழமையுடன்,

**புதிய வாலிபர் சங்கம் (NYA)**

[தயவு செய்து இன்னொருவரிடம் கையளிக்கவும்.]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண் விழித்திருப்போம்
நண்பர்களே!

சோகம் படர்ந்த
தேசப் படமும்,
இதுவரைகாலம்
சிந்திய இரத்தமும்,
இதுவரைகால
இழப்பும்,
நெருப்பும்,
எரியும் மனமும்

இன்னொருவனுக்கு அடிமையாகவா?

இரவல் படையில்
புரட்சி எதற்கு?

எ ங் க ள் நி ல த் தி ல்
எ ங் க ள் ப ல த் தி ல்
எ ங் க ள் கா ல் க ளி ல்
த ங் கி நி ல் லு ங் க ள்

வெல்வோமாயின் வாழ்வோம்;
வீழ்வோமாயினும் வாழ்வோம்!
நமது பரம்பரை
போர் புரியட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்